# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

CC.No. 34/2025 DATE: 22.06.2026

**அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சண்முககுமார்** | Father's Name | : |
| District | : **சேலம்** | Taluk | : |
| Village | : | Calling | : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Religion | : **இந்து** | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த காவல் ஆய்வாளர் திரு.தங்கவேல் பணியிடம் மாற்றம் பெற்று சென்றுவிட்டதால், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 25.06.2023ம் தேதி இரவு 07.00 மணிக்கு, நிலைய அலுவலில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரகு இருந்தபோது, சேலம்

சீரகாபாடி விம்ஸ் மருத்துவமனையில் இருந்து ஸ்ரீதரண் மற்றும் ராகுல் என்பவரின் சாலைவிபத்து காயதகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணி என்பவரை அனுப்பி சிகிச்சையில் இருந்த அ.சா.1–ராகுல் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுவந்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ததில் குற்ற எண். 208/2023 ஆக சட்டபிரிவுகள் 279, 337 IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். மேலும் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து, கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்துள்ளார். **(மேற்சொன்ன புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 26.06.2023, காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதன், இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், அன்றைய தினமே எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

4) பின்னர் சம்பவ இடத்தில் இருந்த கண்ணுற்ற சாட்சிகள் ராகுல், சீனிவாசன், தங்கவேல், புஷ்பா என்பவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்த ஸ்ரீதரண் என்பவரின் பிரேதத்தை அன்றைய தினமே, சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் குமார், சகாதேவன், செல்லதுரை, செந்தில்குமார், யுவராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேதத்தை இறப்பின் மருத்துவர் ரீதியான காரணத்தை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

5) சாட்சிகளை விசாரணை செய்து முடித்த நிலையில் புலன் விசாரணை அதிகாரியிடம் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரகு கோப்பை ஒப்படைத்ததின் அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பை விசாரணை எடுத்து கொண்டு, 30.06.2023 ம் தேதியன்று இறந்துபோன ஸ்ரீதரண் என்பவருக்கு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பழனிசாமி என்பவரை 30.06.2023 ம் தேதியன்று விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

6) இவ்வழக்கில் காயம்பட்ட திரு.ராகுல் என்பவருக்கு சிகிச்சை அளித்த சேலம் விம்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.குரு சீனிவாசன் என்பவரை விசாரித்து காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி சான்றில் ஏற்பட்ட காயம் கொடுங் காயம் என சான்று அளித்துளளார். இது தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) காயம்பட்ட ஸ்ரீதரண் என்பவர் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவுகள் 279, 337 IPC லிருந்து 279, 337, 304(A) IPC ஆக மாற்றம் செய்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** காயம்பட்ட ராகுல் என்பவருக்கு கொடுங்காயம் என்று சான்றழிக்கப்பட்டதால் 279, 337, 304(A) IPC லிருந்து 279, 338, 304(A) IPC ஆக மாற்றம் செய்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8) மேலும், இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களான TN 90 E 5305 – TVS XL, TN 30 AE 4691 – Bajaj Plantina, TN 90 A 5079 – Splendor pro என்ற வாகனங்களை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார்.

9) பின்னர், மூன்று வாகனங்கள் தொடர்பான மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.10, 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

10) மேலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. ரகு மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 13.04.2024 ம் தேதி, சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) IPC–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், அ.சா.1 னிடம் பொய்யாக புகாரை பெற்று குற்ற இறுதி அறிக்கையை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

**Sd/- D.Sivakumar**
Judicial Magistrate No.II,
Sankari.